முச்சந்தி முரளி



"அவை எப்பவும் நெருக்கம், நாங்கள் தான் பிறத்தி பாருங்கோ"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 195

சனிக்கிழமை
08 ஜூன் 2024

வைகாசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


# நெருக்கமான உறவுநிலை இலங்கையுடன் நீடிக்கும்

## இந்தியப் பிரதமர் மோடி அறிவிப்பு



**கொழும்பு, ஜூன் 8**

**'அயல்நாட்டுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையில் இந்தியா உறுதியாகவுள்ளது. எதிர்வரும் காலங்களில் இந்தியாவுடன் இலங்கை நெருக்கமாகச் செயற்படும் என்று இந்தியாவின் இப்போதைய பிரதமரும், மூன்றாவது முறையாக பிரதமராக நாளை பதவியேற்கவுள்ளவருமான நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.**

09

# வடக்குப் பகுதியில் கடற்கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு - கிழக்கு கடற்பகுதிகள் இன்று கொந்தளிப்புடன் காணப்படும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

09

## ஊதிய உயர்வு

# ஆசிரியர்கள் விரைவில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடு தொடர்பான கோரிக்கையை

09

# வேலையற்ற பட்டதாரிகள் நாளை போர்

கொழும்பு, ஜூன் 8

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகப் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-66)

# தீவுகளுக்கான படகுச்சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும்!

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கில், பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு போக்குவரத்துத்துறை மேம்படுத்தப்படவேண்டும். குறிப்பாகத் தீவகங்களுக்கான படகுச்சேவை விஸ்தரிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

09

# நீதிபதி நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துக

கொழும்பு, ஜூன் 8

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, நீதிபதி நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பகிரங்கப்படுத்துமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டு கால யுத்தத்துக்குத் தீர்வு

09




# ஜனாதிபதித் தேர்தலில் விஜயதாஸ

கொழும்பு, ஜூன் 8

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், நீதி அமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

09



# நயினாதீவு நாகபூஷணிக்கு திருவிழா நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 8

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அடியவர்களின் 'அரோகரா' கோஷங்கள் மற்றும் மங்கலவாத்திய முழக்கங்களுக்கு மத்தியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான அடியவர்கள் கலந்துகொண்டனர். தொடர்ந்து பதினைந்து தினங்கள் ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழா இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

# சாரதிகள் இடமாற்றம்: ஆளுநர் இணக்கமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் வருடாந்த இடமாற்றம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ள தமது வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி வடக்கு அரச சாரதிகள் சங்கம், கடந்த திங்கட்கிழமை முதல் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தநிலையிலேயே வடக்கு மாகாண ஆளுநரின் உடன்பாட்டுக்கமைய ஜூலை முதலாம் திகதி முதல் இந்த இட்மாற்றம் நடை

09

# வாள்வெட்டுகளுடன் தொடர்புடையவர் கைது!

## 8 வாள்களும் மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 8

பல்வேறுபட்ட வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் யாழ்ப்பாணம் ஈவினைப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 8 வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளைப் போன்று செயற்படும் காட்டு யானைகள்

## விமலவீர திஸாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 8


**காட்டு யானைகளால் நிம்மதியாக உறங்கமுடியவில்லை. வெளியே நடமாடமுடியவில்லை. காட்டுயானைகள் விடுதலைப் புலிகள் அமைப்பைப் போன்று செயற்படுகின்றன.**

-இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் விமலவீர திஸாநாயக்க.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த அமர்வில், வாய்மூல வினாக்களுக்கு வனஜீவராசிகள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி பதிலளித்துக்கொண்டிருந்த போது, குறுக்கிட்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யானைகளுக்குக் குழிகள் வெட்டும் திட்டத்தை நான் ஆரம்பித்தேன். யானைகளுக்கு ஆதரவாகத் தடை உத்தரவு பெற்றார்கள். தடையுத்தரவு பெறுவோரின் வீடுகளை யானைகள் தாக்குவதில்லை. உடவளவைப் பகுதியில் யானை களின் வரவைத் தடுப்பதற்கு நான் குழிகள் வெட்டினேன். தற்போது அங்கு யானைகளின் பிரச்சினைகள் இல்லை. காட்டு யானைகளால் இரவில் உறங்க முடியவில்லை. வீதியில் செல்ல முடியவில்லை. மாணவர்கள் பாடசாலைக்குக்கூடச் செல்ல முடியவில்லை. விடுதலைப்புலிகள் போல் யானைகள் பொதுமக்களை அடித்துக் கொல்கின்றன - என்றார். (எ-இ)



# சிவகுமாரனுக்காக கண்ணீர் சிந்திய வயோதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

தியாகி பொன். சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் உரும்பிராயைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் இருகைகளையும் கூப்பி வணங்கி கதறியழுது நினைவேந்தியமை அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈழத்தமிழின விடுதலைப் போராட்டத்தின் முன்னோடியும், முதல் தற்கொடைத் தியாகியுமான பொன். சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த புதன்கிழமை உரும்பிராய் சந்திக்கு அருகிலுள்ள அவரது உருவச் சிலையடியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

# சிரமதானமும் மரநடுகையும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

உலக சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பாடசாலை மட்ட நிறைவு நிகழ்வு அதிபர் ப. ஆனந்தராசா தலைமையில் கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது முழங்காவில் பொலிஸ் நிலையம் சார்பில் பாடசாலைக்கு ஒருதொகுதி மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சிரமதானமும் மரநடுகையும் மேற்கொள்ளப்பட்டன. (ஒ-25-159)

# ஓரினச்சேர்க்கை பெண்கள் கைது



கொழும்பு, ஜூன் 8

ஓரினச்சேர்க்கையாளர்களான பெண்கள் இருவர், அவர்களின் கணவன்மாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வத்தளையைச் சேர்ந்த பெண்ணொருவருக்கும் கந்தானையைச் சேர்ந்த பெண்ணொருவருக்குமிடையே பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் நட்பு ஏற்பட்டுள்ளது. இருவரும் ஒருமாதத்துக்கு முன்னர் காணாமற்போயிருந்தனர். அதனையடுத்து இரண்டு பெண்களின் கணவன்மாரும் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். முறைப்பாட்டுக்கமைய இருவரும் கைதுசெய்யப்பட்டபோது தாங்கள் ஓரினச்சேர்க்கையாளர்கள். எங்களைப் பிரிக்கவேண்டாம் எனத் தெரிவித்துள்ளனர். எனினும் இருவரையும் கணவன்மாருடன் பொலிஸார் அனுப்பிவைத்துள்ளனர். (ச-6)

# நிறைவேற்றப்படாத கோரிக்கை தொடரும் சட்டவிரோதச் செயல்கள்

முல்லைத்தீவு, ஜூன் 8

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருப்பதாக பொது மக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் இருந்து மணல், மரங்கள் என்பன கொக்காவில், தேறாங்கண்டல் வழியாகவும் சட்டவிரோதமாக வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இந்நிலையில் துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கொக்காவில் பகுதியிலும் தேறாங்கண்டல் பகுதியிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கூட்டுக் காவலரண்கள் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். இருப்பினும் காவலரண்களை அமைத்து, இவ்வாறான சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்காமையால் மணல் அகழ்வும், மரம் கடத்தலும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-25-13)

# பொதுவேட்பாளருக்கு தகுதியானவர் யார்?

## ஆனந்தசங்கரி கேள்வி

கொழும்பு, ஜூன் 8

அரசியலில் தீவிரமாகச் செயற்படுபவர்களில் பொது வேட்பாளருக்குத் தகுதியான ஒருவரை முதலில் சொல்லுங்கள் பார்ப்போம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுவேட்பாளர் தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு குறித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேடிவந்த வாய்ப்புகளை நாங்கள் தவறவிட்டுள்ளோம். இலங்கை வரலாற்றில் சிங்களத் தலைவர் ஒருவர் சமஷ்டியை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டபோது, வாக்களிக்கவேண்டாம் எனத் தூண்டிய கட்சிகள்தான் இப்பொழுதும் இருக்கின்றன.

தமிழ் வேட்பாளர் தெரிவு என்ற கருத்துக்கு நாம் மாறாகவே உள்ளோம். அரசியலில் தீவிரமாகச் செயற்படுபவர்களில் அதற்குத் தகுதியான ஒருவரை முதலில் சொல்லுங்கள் பார்ப்போம். அவ்வாறு மக்கள் மத்தியில் தகுதியானவர்கள் எல்லோரும் ஒதுங்கியிருக்கின்றார்கள்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேசும்போது அனுபவமுள்ளவர்களின் ஆலோசனைகளைப் பெறவேண்டும், அவ்வாறு பெறுவதில்லை. மக்களுக்கு 2005 ஆம் ஆண்டு கிடைத்த வாய்ப்பை தடுத்த நீங்கள், யாரும் அரசியலில் இருக்கத் தகுதியற்றவர்கள். அந்தத் தேர்தலில் வாக்களித்திருந்தால் இன்று சமஷ்டி ஆட்சி இருந்திருக்கும்- என்றார். (ச-113)

# மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 8

மகாஜனக் கல்லூரி அதிபர் ம. மணிசேகரன் ஓய்வுபெறுவதைக் கௌரவித்து அவரது சேவைக்காலத்து பழைய மாணவர்களால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் மணிவிழா நடத்தப்படவுள்ளது. (ச)



# மரநடுகை

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு 'நில மறுசீரமைப்பு மற்றும் பாலைவனமாக்கல் வறட்சி தாங்கும் திறன்' எனும் தொனிப்பொருளில் மூலிகைத் தோட்ட மரக் கன்றுகள் நடும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், உதவி மாவட்டச் செயலர், மாவட்ட நிர்வாக உத்தியோகத்தர், கிளைத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலிதவின் கருத்து கவனக்கலைப்பே!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 8

போலியான வாக்கெடுப்பு நடத்துவது போன்ற அறிக்கைகளை வெளியிடுவது மக்களின் கவனத்தை தேவையற்ற விடயங்களுக்குத் திசைதிருப்புவதாகவே அமையும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொதுவாக்கெடுப்பை நடத்தி பொதுத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருக்குமாயின், ஜனாதிபதித் தேர்தலை நேரடியாக நடத்தி வெற்றிபெறமுடியுமாயின், ஏன் பொதுவாக்கெடுப்பை நடத்த வேண்டும். பொதுவாக்கெடுப்பு என்பது பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கு எந்தவகையிலும் மாற்றீடாக இருக்காது.

எனவே, உண்மையான ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக போலியான வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், சில சமயங்களில் நான்கு தேர்தல்களை நடத்த வேண்டியிருக்கும்.

இந்த சர்வஜன வாக்கெடுப்பு கருத்து வெளிப்பாடானது, மக்களின் கவனத்தை தேவையற்ற விடயங்களுக்குத் திசை திருப்புவதாகவே நான் கருதுகிறேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




முல்லைத்தீவு, ஜூன் 8

அம்பலப்பெருமாள்குளத்தை முழுமையாக புனரமைக்குமாறு அந்தப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள் குடியேற்றத் திட்டத்தில் தற்போது 120 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. 50 ஆண்டுகளுக்கு மேலாக குளம் புனரமைப்பு செய்யப்படவில்லை. குளத்தின்அணைக் கட்டுப் புனரமைப்புப் பணிகள் தொடங்கப் பட்ட நிலையில் அரைகுறையில் இடை நிறுத்தப்பட்டுள்ளன. குளத்தின் உட்பகுதியில் அடுக்கப்படவேண்டிய அலை கற்கள் அடுக்கப்படாமல் குவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. மாரி மழையின்போது அணைக்கட்டின் முக்கியமான பகுதிகளில் விவசாயிகள் மண் மூடைகள் அடுக்குவது வழமையாகவுள்ளது. இந்த நிலையில் குளத்தை முழுமையாகப் புனரமைத்து, நீர்ப்பாசன வாய்க்கால்களையும் திருத்தங்கள் செய்யுமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-25-13)

## மண்ணுக்குள் புதையுண்டு பாலகி சாவு

கொழும்பு, ஜூன் 8

மண்சரிவில் சிக்கி 3 வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாவனல்ல - மங்களகம பிரதேசத்தில் நடந்துள்ளது.

அகழியினுள் இறங்கி சிறுமி விளையாடிக் கொண்டிருந்த போது மண்மேடு மூடியதில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (ச-இ)

## பஸ் விபத்தில் பயணிகள் காயம்

கிளிநொச்சி, ஜூன் 8

பளை - கரந்தாய்குளம் ஏ- 9 வீதியில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் விபத்துக்குள்ளானதில் அரச பேருந்தின் சாரதி உட்பட பயணிகள் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த அரசபேருந்தை முந்திச் சென்ற தனியார் பேருந்து திடீரென நடுவீதியில் நிறுத்தியதால் பின் தொடர்ந்து வந்த அரச பேருந்து தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்த சாரதியும் பயணிகளும் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு,மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.விபத்து தொடர்பான விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-9-113)

## உணவுகளின் விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 8

எரிவாயுவின் விலை குறைப்பின் நன்மை நுகர்வோருக்கு வழங்கப்படும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சோற்றுப் பொதி, பிரைட் ரைஸ் மற்றும் கொத்து ஆகிய உணவுப் பொருள்களின் விலையை 25 ரூபாவால் குறைப்பதற்கு சங்கம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், ஏனைய சிற்றுண்டிவகைகள் மற்றும் தேநீர், பால்தேநீர் ஆகியவற்றின் விலை10 ரூபாவால்குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 8

அத்தியாவசிய உணவுப்பொருள்கள் சிலவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தவிலை குறைப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, ஒருகிலோ உள்நாட்டு உருளைக்கிழங்கு 350 ரூபாவாகவும், ஒருகிலோ கோதுமை மா 190 ரூபாவாகவும், ஒருகிலோ வெள்ளை கௌபி 990 ரூபாவாகவும், ஒருகிலோ சிவப்பு கௌபி 950 ரூபாவாகவும், ஒருகிலோ காய்ந்த மிளகாய் 780 ரூபாவாகவும், ஒருகிலோ நெத்திலிக் கருவாடு 930 ரூபா[illegible] வாகவும் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதினம் தெரியுமோ?

நாங்கள் பிழைவிட்டால்கூட அதை அடுத்தவையில சுமத்திப்போட்டு, எங்கட கை சுத்தம் எண்டு காட்டுறதில இஞ்ச இருக்கிறவை கடும் விண்ணர். இப்ப கிட்டடியில் ஒரு நியூஸ் கேள்விப்பட்டிருப்பியள். அண்டைக்கு ரணிலார் வரேக்க, பட்டதாரி ரீச்சர் மாருக்கு நியமனம் குடுத்தவர். அதில கிளிநொச்சிப் பட்டதாரி ஒராளுக்கு குடுத்த நியமனக் கடிதத்தை இப்ப திருப்ப வாங்கிட்டினமாம். என்ன ஏதெண்டு கேட்டால், 'அது உள்ளுக்க ஒரு மிஸ்டேக் நடந்திட்டுது' அதுதான் அவாக்கு குடுத்த நியமனத்தை திரும்ப வாங்கிட்டம்'எண்டு சொல்லுப்பட்டிருக்கு. அந்தப் பட்டதாரி ஏதும் பிழையான தகவலைக் குடுத்தால் தான் இப்பிடி நியமனம் குடுத்திட்டு திரும்பப் பறிக்கலாம். ஆனால் அந்தப் பட்டதாரி உள்ளதை உள்ளபடி போட்டுத்தான் விண்ணப்பிச்சிருக்கிறார். அந்தப் பட்டதாரியில பிழை இல்லை. அப்ப எங்க தான் பிழை?

'இறையே தவறுடையான்' எண்டு சிலப்பதிகாரத்தில சொல்லுற மாதிரி, பட்டதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை வைச்ச பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிலதான் பிழையாம். அவை எக்ஸாம் வைச்சு, மார்க்ஸ் பதியேக்க இந்தப் பட்டதாரிக்கு மாறிப் பதிஞ்சு போட்டினம். அதாலதான் நியமனமும் குடுபட்டது. இத்தனைக்கும் அந்த எக்ஸாம் எழுதினவை என்னென்ன மார்க்ஸ் எடுத்தவை எண்டு உந்தப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு பப்ளிக்கா அறிவிக்கவுமில்லை. ஒரு போட்டிப் பரீட்சை நடந்தால் அவையின்ர மார்க்ஸை பப்ளிக்கா அறிவிக்கோனும். கிழக்கு மாகாணத்தில இதே எக்ஸாம் வைச்சு அங்க எல்லாருக்கும் என்னென்ன மார்க்ஸ் எண்டு வெளிப்படையா அறிவிச்சவை. இஞ்ச வடக்கில மட்டும் தான் ஏதோ பூதம் காக்கிற புதையல் மாதிரி அந்த மார்க்ஸை ஒளிச்சு வைச்சிட்டு, நியமனப் பட்டியலை வெளியிட்டவையாம். அதால தான் உந்தக் குளறுபடி.

ஒராளுக்கு இப்ப வேலை கிடைக்கிறதெண்டது குதிரைக்கொம்பு. அதிலையும் பட்டதாரியளுக்கு அரசாங்க வேலை கிடைக்கிறது நாடு கிடக்கிற கிடையில இன்னும் கஷ்டம். அப்பிடிக் கிடைச்ச ஒரு நியமனத்தை, அவை செய்யாத பிழைக்காக பறிக்கிறது எந்தவகையில நியாயம்? பிழை விட்டது பொதுச்சேவை ஆணைக்குழு, ஆனால் தண்டனை அந்தப் பட்டதாரிக்கு. இதென்ன கண்டறியாத நடைமுறை. சரி, மார்க்ஸ் பதியிறதில பிழை விட்டவை என்ன செய்திருக்கோனும். இந்தப் பட்டதாரியை விட வேற ஆரும் கூட மார்க்ஸ் எடுத்தவை இருந்திச்சினம் எண்டால், அவைக்கும் நியமனத்தைக் குடுத் திட்டு, இந்தப் பட்டதாரியையும் வேலை செய்ய விட்டிருக்கோனும். அதுதான் சரியான முடிவா இருந்திருக்கும். இப்ப அந்தப் பட்டதாரி வேற எங்கையும் ஒரு பிரைவேட் கொம்பனியில வேலை செய்து கொண்டிருக்கேக்க, இப்பிடி அரசாங்க வேலை கிடைச்சிட்டுது எண்டு நம்பி, அந்தப் பிரைவேட் வேலையை விட்டிருந்தால் என்ன கதி? பிழையா மார்க்ஸ் பதிஞ்சவை வாங்கிக் குடுப்பினமோ? சனங்களின்ர வாழ்க்கையோட விளையாடுற உந்தத் திணைக்களங்கள், புள்ளியைப் பதிஞ்சதில தான் பிழை எண்டால், பிறகு எடுத்த முடிவு அதை விடப் பிழை கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

# பாகிஸ்தான் அணிக்கு அதிர்ச்சி கொடுத்த அமெ.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 11 ஆவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை சுப்பர் ஓவரில் வெற்றி கொண்டது அமெரிக்கக் கிரிக்கெட் அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அமெரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் ஆட்டம் சுப்பர் ஓவருக்குச் சென்றது.
சுப்பர் ஓவரில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி, பாகிஸ்தான் அணிக்கு 19 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது. துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 13 ஓட்டங்களை மட்டுமே பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ஏ)




## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பணவரவுடன் வீண் செலவுகளும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் அனுகூலம் உண்டாகும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**இடபம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். தட்சணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும்.

**மிதுனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டியநாள். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். பிள்ளைகளின் பிடிவாதம் சற்றுக் கோபத்தை ஏற்படுத்தினாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

**கன்னி:** உற்சாகமானநாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வேலைச்சுமையின் காரணமாக சற்றுச் சோர்வு உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். விநாயகரை வழிபடுவது நன்று.

**துலாம்:** சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. செலவு செய்யவேண்டிவரும். சங்கடங்களை சமாளித்து விடுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**விருச்சிகம் :** காரியங்கள் அனுகூலமாக முடியும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. செலவுகள் அதிகரிக்கும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று. பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** புதிய முயற்சி சாதகமாக முடியும். தந்தை வழியில் அனுகூலப் பலன்கள் ஏற்படும். மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் ஆதாயம் உண்டாகும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். காரியங்கள் இழுபறியாகும். மற்றவர்களுடன் பேசும்போது பதற்றம் வேண்டாம்.

**மீனம்:** அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் குறையும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.




## ஸ்கொட்லாந்துக்கு வெற்றி

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 12 ஆவது ஆட்டத்தில் நமீபியா அணியை 5 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது ஸ்கொட்லாந்து அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நமீபியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது நமீபியா. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 18.3 பந்துப்பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. (ஏ)

## சட்டவிரோதமாக நுழைந்தவர்கள் கைது

மன்னார், ஜூன் 8
இந்தியாவிலிருந்து படகு மூலம் சட்டவிரோதமான முறையில் தலைமன்னார் ஊர்மனைக்குள் வருகைதந்த இலங்கையைச் சேர்ந்த 5 பேர் கடந்ததிங்கட்கிழமை தலைமன்னார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
குறித்தநபர்கள் கடற்படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் மன்னார், தாழ்வுபாடு, தலைமன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.
இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன் சென்றுள்ள நிலையில் அங்கு பல்வேறு இடங்களில் வசித்து வந்துள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ஓ-25-56)

## உயர்வடைந்தது மரக்கறி விலை

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்.குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.
சீரற்ற காலநிலை மற்றும் மழை வெள்ளத்தில் மரக்கறிப் பயிர்கள் அழிவடைந்துள்ளன. இதனால் அவற்றின் விலை அதிகரித்துள்ளதுடன் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.
திருநெல்வேலி சந்தையில் கத்தரிக்காய் கிலோ 430 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 320 ரூபாவாகவும், பாகற்காய் கிலோ 700 ரூபாவாகவும் தக்காளி கிலோ 200 ரூபாவாகவும் கரட் கிலோ 250 ரூபாவாகவும் பீற்றூட் கிலோ 400 ரூபாவாகவும் பச்சைமிளகாய் கிலோ 400 ரூபாவாகவும் கீரை ஒருபிடி 150 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)



## கிளிநொச்சி கிழக்குக்கு பொறியியலாளர் நியமனம்

கிளிநொச்சி, ஜூன் 8
வவுனிக்குளத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றி, கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனப் பொறியியலாளராக இடமாற்றம் பெற்றுச்சென்ற கை.பிரகாஷ் கடந்த திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
இவர், கடந்த ஐந்தாண்டுகளாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளராகப் பணியாற்றிய காலங்களில் குளங்களின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றி, விவசாயிகளின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இத்துடன் வவுனிக்குளம் [illegible]வில் அபிவிருத்திப் பணியிலும் [illegible] பணிகளை ஆற்றினார். (ப-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## மீண்டும் டெங்குப் பேரரக்கன்!

வடக்கு மாகாணத்திலும், யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளிலும் டெங்கின் தாக்கம் மிகத்தீவிர மாகியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இவ்வருடத்தில் மட்டும் 4 ஆயிரத்து 729 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்றும், இந்த நிலைமை மேலும் மோசமாகக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் எச்சரித் துள்ளார். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மட்டுமல்ல, வடக்கின் அநேக மாவட்ட மருத்துவமனைகள், பிரதேச மருத்துவமனைகள் என்பவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் டெங்குத் தொற்றுத் தொடர்பான தரவுகள் ஆரோக்கியமானவை அல்ல. இப்போதுள்ள காலநிலை, வழக்கமான மாரிகாலங்களைவிடவும் ஆபத்தானது என்ற செய்தியைத்தான் அந்தத் தரவுகள் கட்டியம் செய்கின்றன. எல்லாவற்றையும்விட, பூச்சியியல் ஆய்வின் அடிப்படையில் டெங்குக் குடம்பிகள் தீவிரமாகப் பரவி வருகின்றன என்று வெளிப்படுத்தப்பட்டிருப்பதானது டெங்குத் தொற்று, அடுத்தசில நாள்களில் அல்லது வாரங்களில் தீவிரமாகக்கூடிய ஏதுநிலையையும் உண்டாக்கி யிருப்பதையே கட்டியம் செய்கின்றது.

டெங்கு காரணமாக அன்றாடம் பல நூற்றுக் கணக்கானவர்கள் வடக்கிலுள்ள பல மருத்துவ மனைகளையும் நாடிக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரச் சிதிலம் மருத்துவத்துறையை பெரும் சவாலுக்குள் தள்ளியுள்ளது. மருந்துகள் - மருத்துவ உபகரணங்களுக்குத் தட்டுப்பாடென்பது கடந்த சில மாதங்களாகவே எழுதப்படாத விதியாகிவிட்ட நிலையில், இந்த மருத்துவ நெருக்கடி மற்றொரு கோணத்தில் வியாபிக்க வாய்ப்பிருப்பதைத்தான் டெங்குத் தொற்றுத் தொடர்பான மாவட்ட மாகாண தேசியத் தரவுகளும் பறைசாற்றுகின்றன. யாழ்ப்பாணத்தில் நிலவும் மக்கள் நெருக்கம், சுகாதாரமற்ற பொதுச்சூழல், மாறிப்போன உணவு முறைகள், பெருகி வரும் நோய்கள், அனைவரின் உடலிலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வரும் நிலை, மக்கள் நெருக்கத்தால் மாசுபடும் சுற்றுச்சூழல், தேங்கிநிற்கும் தண்ணீர் போன்றவற்றால், மழை என்றாலே ஒருவித எரிச்சல் தோன்றிவிடுகிறது. மழை என்றாலேயே அச்சமும் பதற்றமும் சூழும் அளவுக்கு எங்களின் வாழ்க்கை மாறிப்போய் விட்டது. இதன் பிரதிபலிப்பே இன்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் மாவட்ட மற்றும் பிரதேச மருத்துவமனைகளிலும் எதிரொலிக்கின்றது.

கொரோனா என்பது எவ்வளவு பாரதூரமான உயிர்கொல்லி நோயோ, அதற்கு இம்மியும் குறைந்ததல்ல டெங்குக்காய்ச்சல். ஆதலால், குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகம் கொண்டிராதவர்கள் பொதுவெளிகளில் அதிகம் நடமாடுவதைத் தவிர்ப்பதோடு, டெங்கு பரவும் ஏதுநிலைகளையும் இல்லாதாக்கவேண்டும். பலவித நோய்களுடன் பலநூறு நோயாளர்கள் மருத்துவ மனை வளாகத்துக்குள் தினம்தினம் சென்று திரும்புகின்றனர். பல்வேறு சூழலியல்களுடன் அவர்கள் தொடர்புறுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் மருத்துவமனையின் வளாகத்துக்குள் சிறுவர்கள், குழந்தைகளைத் தேவையற்றவிதமாக அழைத்துச் செல்வதை முற்றாகத் தவிர்த்தல் நலம். உங்கள் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல உங்களின் குடும்பத்தின் ஆரோக்கியத்துக்கும், உங்களின் சமூகம்சார் ஆரோக்கியத்துக்கும் நீங்களே பொறுப்பாளிகள். சுற்றுப்புறச் சூழல் துப்புரவு முதல் கடமைத்தளங்கள் வரையில் அனைத்திலும் பொறுப்புணர்வதே காலத்தேவை...!






## கடன் மறுசீரமைப்பில் இலங்கை முன்னேற்றம்

ஐ.எம்.எப். பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 8**

**இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வலுவான முன்னேற்றத்தை அடைந்துள்ளன என்று சர்வதேச நாணயநிதியத்தின் பேச்சாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றன.

நாணயநிதியத்தின் செயற்குழு எதிர்வரும் 12ஆம் திகதி கூடவுள்ளது. அதில் இலங்கை தொடர்பான இரண்டாவது மீளாய்வு தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (எ-இ)


## இந்திய சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 8

இலங்கைக்குவரும் இந்திய சுற்றுலாவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 5 நாள்களில் மட்டும் 15 ஆயிரத்து 66 இந்திய சுற்றுலாவிகள் இலங்கை வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கடந்த மாதத்தில் இலங்கைக்கு வந்த சுற்றுலாவிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 128 என்றும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (எ-இ)



## 5,587 வீடுகள் சேதம்

கொழும்பு, ஜூன் 8

நாடு முழுவதும் சீரற்ற காலநிலை காரணமாக 5 ஆயிரத்து 587 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமற்போயுள்ளார்.

அதேநேரம், 63 ஆயிரத்து 413 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 39 ஆயிரத்து 6 பேர் சீரற்ற காலநிலையால் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். (எ-இ)

## ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஜூன் 8

இயந்திரப் பொறியியலாளர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையால் நேற்று வெள்ளிக்கிழமை காலை பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

ரயில் இயந்திரப் பொறியியலாளர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. ரயில் இயந்திர சாரதிகளின் இரண்டாம்தர பதவி உயர்வுகள் தாமதம் மற்றும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இயந்திரப் பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (எ-இ)

## தினமும் 100 பேர்

கொழும்பு, ஜூன் 8

நாட்டில் நாள்தோறும் 100 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

இந்தமாதத்தில் இதுவரை497 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ-இ)

### நாளை

09.06.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**வைகாசி - 27**

சுபநேரம் : 08.52 - 10.22

ராகுகாலம் : 04.22 - 05.52

### நாளொரு நல்வார்த்தை

**யார் சொல்லியிருந்தாலும், எங்கு படித்தாலும், நானே சொன்னாலும் உனது புத்திக்கும், பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே!**

**- பெரியார் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அலுவலர் வீட்டில் கூரை பிரித்துத் திருட்டு

## போதைக்கு அடிமையானவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் அரச அலுவலர் வீட்டின் கூரையைப் பிரித்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய குருநகரைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் சிறிது காலத்துக்கு முன்பு சிறையிலிருந்து வெளியே வந்தவர் என்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும் அவரிடம் சிறு தொகை ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

# அரசியல் கூட்டணியிலிருந்து விலக்கப்பட்டார் ரத்னதேரர்



கொழும்பு, ஜூன் 8

விமல் வீரவன்ஸ, திலித் ஜயவீர மற்றும் சிங்கள தேசியவாதிகளின் பங்கேற்புடன் உதயமாகியுள்ள சர்வஜன அதிகாரம் என்னும் அரசியல் கூட்டணியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் ஓரங்கட்டப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

அத்துரலிய ரத்ன தேரர் இந்தக்கூட்டணியில் இணையக்கூடாது என சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இவ்வாறு ஓரங்கட்டப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் புதிய தரப்புகளை இணைத்துக்கொண்டு கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ரத்ன தேரர் ஈடுபட்டுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ப- 44)



ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளையால் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்கள் 40 பேருக்கு கடந்த புதன்கிழமை பயன்தரு மரக்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-9)

# நல்லூர்ப் பிரதேச செயலக சூழல் தின விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 8

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச செயலகம் 7 நாள்களும் 7 வகையான செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இறுதிநாள் நிகழ்வாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு ஊர்வலம் பிரதேச செயலகத்திலிருந்து சங்கிலியன் பூங்கா வரை நடைபெற்றது.

தொடர்ந்து சங்கிலியன் பூங்காவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் 'இயற்கைப் பாதுகாப்பு' எனும் தொனிப்பொருளில் வீதி நாடகம் நடைபெற்றது.

நிகழ்வில் சுற்றுச்சூழல் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இறுதியாக கிராம அலுவலர்களின் நாடகம் இடம்பெற்றது. (ச-இ)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, 'பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைகளைத் தவிர்த்துப் பனையோலைப் பொருள்களை பயன்படுத்துவோம் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (எ-25-9)

# சுற்றாடல்தின நிகழ்வும் உபகரணக் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித, விஞ்ஞான மன்றம் நடத்திய சுற்றாடல் தின நிகழ்வும் கணித விஞ்ஞான உபகரணக் கண்காட்சியும், கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன.

கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.பிரதீபராஜா பிரதம விருந்தினராகவும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் த.சுபோகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ப-66)



# சட்ட உதவிகள் வழங்குவோம்



கிளிநொச்சி, ஜூன் 8

பொன்னாவெளி மக்களை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த மூன்று வாரங்களில் மூன்று தடவைகள் இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. இந் நிலையத்தினர், பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் போராடி வருகின்ற மக்களையே சந்தித்து, மக்களுக்கு வேண்டிய சட்ட ஆலோசனைகளையும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கும் விளக்கமளித்து வருவதாக பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் போராடுகின்ற மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும், பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் கடல்நீர் உட்புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்திவிடும். குறிப்பாக எதிர்காலத்தில் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களும் சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் முழுமையாக அழிந்து விடும் எனவும் தெரிவித்துள்ளனர். (ப-13)

# கண்டல் தாவர நடுகை



மன்னார், ஜூன் 8

சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, மன்னார் பெரிய பாலம் மற்றும் தள்ளாடி இடை நடுவில் காணப்படும் கரையோரப் பகுதிகளில் கடந்த புதன்கிழமை, கண்டல் தாவரங்கள் மீள் நடுகை செய்யப்பட்டன.

டினோஸா கண்டல் தாவரப்பள்ளியின் அனுசரணையில், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன், மன்னார் நகரப் பிரதேச செயலாளர் ம.பிரதீப், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி க.திலீபன், சுற்றுச்சூழல் கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-213)



# சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், ஜூன் 8

கந்தரோடை விளையாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டும் கந்தரோடைப் பெரியகுளத்தை அண்டிய சூழல், சிரமதானம் மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

சிரமதானப் பணியில் கந்தரோடை விளையாட்டுக் கழக உறுப்பினர்களான இளைஞர்கள், உடுவில் பிரதேச செயலக சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் பங்குபற்றினர். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**சரஸ்வதி தேவராசா**

தோற்றம் 19.05.1944 மறைவு 27.05.2017



திதி - பூர்வபஷ்ச துதியை (08.06.2024)

ஆண்டுகள் ஏழு ஆகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்
நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது

**நினைவில் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
புதுவீதி (நீதிராஜா வீதி)
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 615 3877, 021 222 5499

(CS/55264) J-1

## மணமகள் தேவை

1985 சதயம், கும்பராசி 10 இல் செவ்வாய், கி.பா 25, உயரம்: 168 CM, அரச உத்தியோகத்தர் (கௌரவகுலம்)

தராதரம் : B.Sc, Audio Engineering
Dip. in. media studies
M.A. (Philosophy)
M.A. (Cultural Studies)

எதிர்பார்ப்பு : வீடு/ காணி

**தொடர்பு: 021 222 8212**

(CS 692) V-1

## கட்டடம் வாடகைக்கு

இல 34,36 சேர் வைத்திலிங்கம் துரைசாமி வீதியிலுள்ள எமது LIC Towers கட்டடத்தின் 1ம் மாடியில் 2900 சதுர அடி வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. விருப்பமுடையவர்கள் **021 222 6390** என்ற இலக்கத்துடன் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 4.30 மணிவரை தொடர்பு கொள்ளவும்.
ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை

(CR/42587) J-1

## ஸ்டார்லிங் இணைய கட்டணங்கள்

இலங்கையில்ஸ்டார்லிங் இணைய சேவையை பெற்றுக்கொள்வதற்கு பதிவுக் கட்டணமாக 400 தொடக்கம் 600 டொலர் வரை செலுத்த வேண்டியிருக்கும் என்று இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் தலைவர் மதுசங்க தசநாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன் மாதாந்தக் கட்டணமாக 99 டொலர் செலுத்த வேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

## பணியாளர்கள் தேவை
(சுத்திகரிப்பாளர்கள் Cleaners)

யாழில் இயங்கிவரும் பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். உணவு, தங்குமிடவசதி இலவசம் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்பு: 077 829 5658**

(CS 695) V-1

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா இனத்தவர்களுக்கும் எல்லா வேலைகள் வேலையற்றது பிறைவேட் கம்பனிகள் அரச உத்தியோகம், உத்தியோகம் அல்லாதது வெளிநாட்டு, உள்நாட்டு மணமகன்கள், மணமகள்கள் எவ்வித மணமக்களுக்கும் உங்கள் விருப்பங்களோடு தெரிவுகளுக்கும் எம்மோடு தொடர்பு கொள்ளவும். தெரிவு செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**வி.ஜெயந்தி - 077 973 3183**

(CS 693) V-1

## THE ROYAL COLLEGE OF JAFFNA

A/L 2026ம் ஆண்டு கலைப்பிரிவு வகுப்புகள்

தமிழ் - சின்னக்குழந்தை (B.A)
வரலாறு - P.லக்ஷன் (B.A) (Spl in History)
மீடியா - S.பிரஷாத் (Diploma in Media)
அரசியல் - து.லக்ஷிகா (B.A) (Spl in Political Science)

பிரான்பற்று வீதி, குபேரன் கட்டடமாடி, சங்கானை

**TEL. 077 675 1649**

(CS/55307) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 06 . 1926
மறைவு 05 . 06 . 2024

### இளையப்பா சட்டநாதர்
(முன்னாள் கிராமசபை உறுப்பினர்-மறவன்புலோ)

மறவன்புலோவை பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பா சட்டநாதர் அவர்கள் (05.06.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பா-மாரிமுத்து தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மனோகரன், மகேஸ்வரன், பரமேஸ்வரி, பரமேஸ்வரன், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற குணலிங்கம் மற்றும் யோகாதேவி, அருள்மணி, சரவணபவன், நமோநிதி, சரவணபவான், குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், காசிப்பிள்ளை, சண்முகம் மற்றும் வல்லிபுரம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், கேதீஸ்வரன்-சுபாஜினி, சுபாஜினி-முகுந்தன், சுமதி-ஜீவசுரேன், மணிமாறன்-மதுரிகா, சுதாமினி-மைக்கல், நிஷாந்தன்-துவாரகா, செந்தூரன்-பசிலே, சோனியா-சுதர்ஷன், சீதுவன், ஆதவன்-சர்லொத், அஜந்தா-யெயன், அனுஷா, கஜேஸ்வரா-அனுஷியா, கயறாஜ்-விஜிதா, கஜலக்ஸ்மி-சசிகரன், மதியுகன்-ரேணுகா, கேசறாஜ்-சரண்யா, சுயானா, வாசனா, தினுசா, பானுசா, சோபிதன், சோபிகா-பிரணவன், கிருசிகா ஆகியோரின் அன்புப்பேரனும், அனாமிகா, தூரிகன், பிரவீன், சாருஜன், சஸ்மிதன், ஆதிரா, ஆதினி, ஆதிரன், நிகாரிகா, நெயில், லீலா, அயலான், நிலா, அஜய், சதுஸ்ரிகா, சபரிஷன், கபினாஸ், கேஸ்விகன், தஸ்வின், திபர்ஷன், கோசினி, சமிதா, எகந்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024)ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆறுமுகம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்.**

**தகவல்:
குடும்பத்தினர்
077 445 2598**

(CS 553..) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 06 . 1937
மறைவு 07 . 06 . 2024

### இரத்தினம் இராஜேஸ்வரி

கொக்குவில் மேற்கு பொன்னையா லேனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இராஜேஸ்வரி நேற்று (07.06.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் பாசமிகு மனைவியும், இராசமலர், சுகந்தமலர், ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீரங்கராசா, ஸ்ரீபாலராசா, ஸ்ரீமுருகராசா, ராஜினிமலர், நவமலர், ரஞ்சிதமலர், வனஜமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனபாலசிங்கம், விஜயகுமார், பிரேமினி, விஜயகுமாரி, சந்திரவதனா, கஜேந்தினி, களுக்குன்றன், திருநாவுக்கரசு, ஜெயசந்திரன், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இராசலிங்கம், சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், கனகேஸ்வரி மற்றும், இரத்தினேஸ்வரி, யோகேஸ்வரி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சற்குருதாஸ், சுகிர்தாஸ், குகதாசினி, நித்தியதாஸ், ராமதாஸ், யோகிதாஸ், சுகந்தகுமாரி, சுகந்தகுமாரன், விஜயமலர், ராஜ்குமார், ரேவதி, மயூரன், சதீஸ், ராகுல், பிரவீன், வஜித்தா, நிதர்சி, கிருசாந், பிரசாந், நிசாந், விருஸ்னி, மயூரி, அனோயி, பவித்திரா, பிரதீபன், பிரதாபன், ரசித்தா, லாவண்யன், நிதுயா, விதுசன், நிதுசன், ஜெனனி, சேயோன், அபிலாஷ், தாருகா ஆகியோரின் பேர்த்தியும், கௌரீசன், நிதுசனா, கபிஸ்னா, கிசானசாயுத்ரன், தனுஷிகா, கவினேஷ், தேஷிதா, காசினி,ஹரிஸ், ஹரித்ராம், கனிந்திகா, அக்ஷயா, கபிஷா, விகாஸ், அர்யூன், அனியா, அகர்வா, அபூர்வா, அபியன், நிலு, நிரா, தியா, அரேஸ், கியான், சிரேகா, யஸ்மின், சதாண, இதயா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னையா லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**


(CS/55294) J-1

**தகவல்:
குடும்பத்தினர்
076 896 4267**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 03 . 1928



இறப்பு 06 . 06 . 2024

### அமரர் சீனியப்பா நாகலிங்கம் (குஞ்சியன்)

உடுவில் கிழக்கு சோமராம் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சீனியப்பா நாகலிங்கம் நேற்றுமுன்தினம் (06.06.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியப்பா - முத்தாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தங்கப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், இரத்தினத்தின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற சோதிலிங்கம் (சோதி), நாளினி, சத்தியலிங்கம் (அப்பன்), ஆனந்தலிங்கம் (ராசன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாநாயகி, மகேஸ்வரா (பாப்பா), கலாவதி, சசிகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணி (லண்டன்), கஜனுகா, துஷானன் (லண்டன்), திபிஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(CS/55312) J-1

தகவல்:
குடும்பத்தினர்
077 854 5293

## மரண அறிவித்தல்



### திருமதி சுலோச்சனா வசந்தகுமார்

வவுனியாவை பிறப்பிடமாகவும், வைரவபுளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோச்சனா வசந்தகுமார் 06.06.2024 (வியாழக்கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வசந்தகுமாரின் (பொறியியலாளர்-கட்டார்) அன்பு மனைவியும், பிரபல சட்டத்தரணி காலஞ்சென்ற இ.வ.வில்வராஜா-பங்கஜம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம்-மகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், மீரா (மருத்துவர்-மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா) குமணன் (செலான் வங்கி, வவுனியா கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷகானாவின் (பிரதேச செயலகம், வவுனியா-வடக்கு) அன்பு மாமியும், ஜெயராஜன் (கனடா), மஞ்சுளா (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், வவுனியா), கவிதா (பிரதேச நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனை, வவுனியா) அமரர் வரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்ஷினி (கனடா), ஜெயக்குமார் (ஆசிரியர்-புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), சாந்தகுமார், உதயகுமார், கௌரிதேவி, சுரேஷ்குமார் (கனடா), பிரேம்குமார் (மலேசியா), சதீஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிஷாரா, மினோஷா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 08:00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக காலை 10:00 மணிக்கு பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

52, ராஜதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.

(CS 691) V-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தியாகராசா மல்லிகாதேவி (தேவி ரீச்சர்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)



தோற்றம்
27.12.1943

மறைவு
06.06.2024

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தியாகராசா மல்லிகாதேவி 06.06.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காளிராசா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - வியாழம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நல்லதம்பி தியாகராசாவின் (ஓய்வுநிலை அதிபர், யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்) அன்பு மனைவியும், தி.தியாக சிறீலன் (AME- EMIRATES), Dr.தி.குமணன் (ICU-& Anaesthesia, போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், T. சர்மிளா (லண்டன்), Dr.K.நிருபா (OPD & ETU, ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திவ்வியன், சிறிமாறன், சிறிமன், ஆரபி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மார்க்கண்டு, மகேந்திரன் (கனடா), சவுந்தரம் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலசிங்கம் (கிளி), தவமணிதேவி (ஜேர்மனி), நவரத்தினம் (அவுஸ்திரேலியா), சரோஜினி தேவி (கனடா), சிவனேசராசா (கனடா), மங்கயற்கரசி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சாந்தகுமாரி, செல்வமலர் (அவுஸ்திரேலியா), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானபூங்கோதை (நோர்வே), சற்குணலிங்கம் (இத்தாலி), புஸ்பலீலா (லண்டன்), சிறீகாந்தன் (நோர்வே) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்: குடும்பத்தினர்.
ந.தியாகராசா (கணவர்)
தி.தியாகசிறீலன் (+447463580469)
Dr.T.குமணன் - 077 284 9632
Dr.K.நிருபா - 076 927 9118

(CR 42610) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயக் குரோதி வருடப் பெருவிழாவின் தேர்த்திருவிழா, கடந்த புதன்கிழமை காலை பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. (ப-66)

# வடக்கு- கிழக்கு மக்களின் வாக்குகள் ரணிலுக்காம்

## பாலித நம்பிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 7

வடக்கு- கிழக்கு மக்களின் நம்பிக்கையை வென்ற தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு மட்டுமன்றி முஸ்லிம் கட்சிகளின் ஆதரவும் ரணிலுக்குத்தான் கிடைக்கும். -இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் ஊடகமொன்றில் அண்மையில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்கு 69 இலட்சம் வாக்குகள் உள்ளன, அதில் 30 இலட்சம் மற்றைய தரப்புகளுக்குச் சென்றாலும் எஞ்சியவை ரணிலுக்கே உள்ளது. அவரால் மட்டுமே நாட்டை மீட்கமுடியும். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் களமிறங்குவார். அவர் களமிறங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே கட்சியும் உள்ளது. ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியும், பெரும்பாலான எம்.பி.க்களும் ரணிலுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர் -என்றார். (எ-25-44)

## வடக்குப்...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இன்று சனிக்கிழமை மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன், வடக்குக் கடற்பகுதியில் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் வடக்கு - கிழக்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதுடன் இது தொடர்பில் மீனவர்கள் அவதானமாக இருக்கவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-66)

## ஜனாதிபதித்...

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் ஒழுக்காற்று விசாரணையை எதிர்கொள்வதற்கும் நான் தயார். எந்தச் சவாலுக்கும் முகங்கொடுக்கும் வகையிலேயே சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றும் விஜயதாஸ ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (ம-25-44)

## சாரதிகள்...

முறைப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்துக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (அ-ச)

## ஆசிரியர்கள்...

வலியுறுத்தி எதிர்வரும் 12 ஆம், 26 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு நிதியமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடுகள் எதுவும் எட்டப்படாத நிலையிலேயே இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் போராட்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வடமாகாணம் உட்பட நாடு முழுவதும் அனைத்துக் கல்வி வலயங்களுக்கு முன்பாகவும் ஆசிரியர்கள், அதிபர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும், 26 ஆம் திகதி புதன்கிழமை சுகவீன விடுமுறையை அறிவித்து ஆசிரியர்கள், அதிபர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் உதயனுக்குத் தெரிவித்தார்.

குறித்த போராட்டங்கள் தொடர்பில் வட மாகாண இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையிலான முக்கியமான கலந்துரையாடலொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை இணையவழியில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம-66)

## தீவுகளுக்கான...

போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய வீதிகள், புனரமைக்கப்படவேண்டிய வீதிகள், எதிர்கால திட்ட முன்மொழிவுகள், ரயில் போக்குவரத்து, கடல்வழி போக்குவரத்துச் செயற்பாடுகள், வடக்கு மாகாண போக்குவரத்துத் துறையில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

தீவுகளுக்கான பயணிகள் போக்குவரத்திற்குரிய படகுச் சேவை விஸ்தரிக்கப்படவேண்டும் எனவும், இறங்கு துறைகள் புனரமைக்கப்படவேண்டும் என்றும் ஆளுநர் இதன்போது கூறினார். பஸ் பயணிகள் நாளாந்தம் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தின்போது ஆளுநர் எடுத்துரைத்தார். ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் அரச மற்றும் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஆளுநர் கூறியதற்கு அமைய அதற்கான உரிய செயற்பாடுகளை அமுல்படுத்துமாறு மத்திய அமைச்சின் துறைசார் அதிகாரியால், மாகாண அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கான சமிக்ஞைக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் யாழ். மற்றும் காங்கேசன்துறை ரயில் நிலையங்களுக்கு அருகில் போக்குவரத்து முனையங்களை நிறுவுதல் போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள ரயில் நிலையங்களுக்கு அருகில் காணப்படும் பொருள் களஞ்சியசாலைகளை உரியவாறு பயன்படுத்தவேண்டும் எனவும், பயன்பாடு குறைந்து காணப்படும் களஞ்சியசாலைகளை தனியாரிடம் வழங்கி அவற்றை மேம்படுத்தவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்துத் துறையை விஸ்தரிப்பது தொடர்பில் கேட்டறிந்துக்கொண்ட மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், கடல்வழிப் போக்குவரத்தின் அவசியம் மற்றும் தேவை தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (அ-ம-26)

## நீதிபதி...

காணும் நோக்குடன் மஹிந்த ராஜபக்ச 'கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு' என்ற பெயரில் ஆணைக்குழுவொன்றை நியமித்திருந்தார். அதன் பின்னர், 2021 ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், நீதியரசர் நவாஸ் தலைமையில் பிறிதொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்த ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டில் தனது இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கை இந்த வருடம் ஜனாதிபதி ரணிலிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அண்மையில் வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டபோது, நவாஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவே தக்க தருணம் என்று தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் யாவும் வெளிப்படைத் தன்மையுடனேயே இடம்பெற்றன. உறுப்பினர்களை நியமிப்பதுகூட வெளிப்படைத் தன்மையுடனேயே இடம்பெற்றது. எனவே முதலில் நவாஸ் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (அ-ம-6)

## நெருக்கமான...

இந்திய மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பா.ஜ.க. கூட்டணிக்கும், மோடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பிரதமர் மோடியை, ரணில் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடிய போதே, இலங்கையுடன் எதிர்வரும் காலத்திலும் இந்தியா நெருக்கமாகச் செயற்படும் என்று ரணிலிடம் மோடி தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்றபோது, வெளியிடப்பட்ட இந்திய - இலங்கைக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா உறுதியாக உள்ளது என்றும் ஜனாதிபதி ரணிலிடம், இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## வாள்வெட்டுகளுடன்...

யாழ்.மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்று மாலை அந்த நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர், வெளிநாட்டுப் பிரஜை ஒருவருடைய வீட்டிலேயே ஆயுதங்களை மறைத்து வைத்திருந்துள்ளார் என்றும், இதன் பின்னணியில் பலருக்குத் தொடர்பிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி வெளிநாட்டுப் பிரஜைக்கும் இதில் தொடர்புண்டா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு வீரர்கள் புறக்கணிப்பு; மாகாண நிர்வாகமே பொறுப்புக்கூறுக

## சிறீதரன் எம்.பி. கடிதம்

**கிளிநொச்சி, ஜூன் 8**

**கடற்கரை கைப்பந்து தேசிய போட்டிக்கு பின்தங்கிய கிராமமான கிளிநொச்சி - மலையாளபுரத்திலிருந்து தமது திறமையால் தகுதி பெற்ற வீரர்களின் வாய்ப்பு நிர்வாக நடைமுறையின் சீரின்மையால் பறிக்கப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரிய விடயம். நிதியின்மையை காரணங்காட்டி மறுக்கப்பட்ட இந்த விடயத்துக்கு மாகாண நிர்வாகம் பொறுப்பேற்கவேண்டும்.**

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண பிரதம செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக்கடிதத்தில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த புதிய பாரதி விளையாட்டுக்கழகத்தின் இரண்டு வீரர்கள் கரைச்சி பிரதேச செயலக பிரிவு, மாவட்ட, மாகாண மட்டங்களில் மேற்படி போட்டியில் பங்குகொண்டு வெற்றியீட்டியுள்ளனர்.

இருவரும் 3 நாள்கள் நீர்கொழும்பில் நடைபெற்ற தேசியமட்டப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றிருந்த போதும், 'நிதியின்மை' காரணமாக அவர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை.

இது மக்களின் பிரதிநிதியாக என்னையும் பாதிக்கும் சம்பவமாக அமைகிறது.

தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்பதற்காக குறித்த வீரர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பு மாகாண நிர்வாகத்துக்குட்பட்டது.

இதுவிடயத்தில் உரிய கரிசனைகொண்டு, குறித்த வீரர்களின் வாய்ப்பு மறுக்கப்பட்டமைக்குரிய காரணத்தை வெளிப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் இதுபோன்ற சம்பவங்கள் மீளநிகழாமையை உறுதிப் படுத்த முடியும் - என்றுள்ளது. (ச-113-26)

# மாவட்டத்தில் முதலிடம் பிடித்த மாணவி வஜீனாவுக்குப் பாராட்டு



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மாவட்ட ரீதியாக முதலிடத்தைப் பிடித்த மாணவி வஜீனாவுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது.

மாணவி வஜீனா கல்விகற்ற பாடசாலையான பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இருந்து அவர் ஊர் மக்கள், ஆசிரியர்கள், சக மாணவர்கள், கல்விமான்கள், அயல் ஊரவர்கள் என பல தரப்பினரும் புடைசூழ அவரது ஊரான சாந்தை கிராமத்துக்கு ஊர்வலமாக காரில் அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் சாந்தை சன சமூக நிலையத்தில் குறித்த மாணவிக்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் மாணவிக்கு அன்பளிப்புகளும், நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. மாணவியின் பெற்றோரும் கௌரவிக்கப்பட்டனர். (ம-27)

# அயர்லாந்தை வென்றது கனடா!



ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் அயர்லாந்தைத் தோற்கடித்தது கனடா. முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிக்கொலஸ் கிரொன் 49 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதையடுத்து 12 ஓட்டங்களால் கனடா வெற்றி பெற்றது. அதிகபட்சமாக மார்க் அடர் 34 ஓட்டங்களைப் பெற்றார். (ம)


## வீடு விற்பனைக்கு

கொழும்பு, தெஹிவளை, Hospital Road, Williams Junction க்கு அருகாமையில் இரண்டு அறைகள், ஒரு சமையலறை, ஒரு வரவேற்பறை, ஒரு கழிவறையுடன் கூடிய திருத்த வேலை செய்யப்பட்ட தொடர்மாடி வீடு விற்பனைக்கு உண்டு

மேலதிக விபரங்களுக்கு: 074 147 6796

(CS 697) V-1

Healing Humanity
மனித நேயம்

The Organization Committee
Requests the honor of your presence.
at the
Ceremonial Inauguration
of
HEALING HUMANITY
and
the Graduation of the Students
of
Diploma in Psychological Counseling

on Sunday, June 09, 2024 at 4.00pm
at the Valampuri Hotel

Healing Humanity Ltd
Jaffna College Undergraduate Department
464, Hospital Road, Jaffna.
Tel: 077 917 7230

## மணி விழா வாழ்த்து

திருமதி சோதீஸ்வரி நாகராஜா
(ஆசிரியர் - யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்)




ஆசிரியர் சேவையில்
22.03.1990
தொடக்கம் 08.06.2024 வரை
34 வருடங்களாக
அர்ப்பணிப்போடு பணியாற்றி
இன்று ஓய்வு பெறும் ஆசிரியர்
திருமதி சோதீஸ்வரி
நாகராசா

அன்பின் ஆற்றலின் முழு உருவே
பெயருடன் இணைந்தே சோதி போல
கைதையூரில் ஆரம்பக் கல்வியின் சோதியே
பல் ஆளுமையின் சிற்பியே! நவரச நாயகியே!
சேதுவின் வளர்ச்சிக்காய் அல்லும் பகலும் உழைத்தவர்
இன்று சேவை நிறைவுற்று மணிவிழாக் காணும்
உங்கள் பணி சேதுவின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில்
இருக்கும் தங்களின் ஓய்வு காலம் நலங்கள்
நிறைந்ததாய் மிளிர பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

சேவை விபரம்

- 22.03.1990 - 09.02.2010 - யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்
- 10.02.2010 - 17.02.2010 - யா/எருதிடல் அ.த.க பாடசாலை
- 18.02.2010 - 08.06.2024 - யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

(CS/55306) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கலையரசி தயாளன்



சிவன்கோவிலடி வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மூத்தவிநாயகர் கோவிலடி வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலையரசி தயாளன் அவர்கள் கடந்த (01.06.2024) சனிக்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கெங்காதரன் - ரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், கெங்காதரன் தயாளன் அவர்களின் ஆருயிர் மனைவியும், சச்சிதானந்தம்பிள்ளை, கமலவேணி, வேதாந்தசிவம், அரசகுலராணி, காலஞ்சென்ற அற்புதநாதன் மற்றும் அஞ்சலிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரத்தினம், காலஞ்சென்ற புவனசுந்தரம், காலஞ்சென்ற கோகுலநாயகி மற்றும் பரிபூரணதேவி, காலஞ்சென்ற கிருபானந்தராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற காங்கேயன், காலஞ்சென்ற பங்கயம் மற்றும் ஈஸ்வரி, லோகோலவரி, பூங்கோதை, கலாபதி, காலஞ்சென்ற ரஞ்சினி சிவகுமார் (கனடா), விமலன் (பாரிஸ்), அம்பிகையாகன் (லண்டன்), அம்பிகை, மங்களம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அன்பழகன்BSc (Eng), C.Eng. MPS, MASCE. CIERP, PMP, CPA(U.S), FCMA (U.K), CGMA, OCP - ERP / EPM, (USA), கமலவதனி BSc (Eng), MSc (Eng), Mphil (USA), Dr.மணிவாசகன் BSc, MBBS, DTCD, MSc, MBA, மலர்மங்கை, மணிவண்ணன் (BSc (Eng), CPA (SL), CPA (Aus), ACMA (UK), CGMA, MPM (US), ACS (Aus), திருவரங்கன் BSc (Eng), MSc (Eng), PhD, (USA), சிவமங்கை, கேதாரகௌரி Norway BSc, MBA, MPM (US) ஆகியோரின் ஆருயிர்ச் சித்தியும், வேதரஞ்சினி (ஆசிரியை), சிறீரஞ்சினி (ஆசிரியை), தாரணி, கேசிகன், பிரகாசன் (UK), சுசீவன் (பிரான்ஸ்), கோபினி, பாலமுரளி கிருஸ்ணா ஆகியோரின் அன்பு அத்தையும், அபராஜிதா (USA) (B.Com,MCom), ரவிசங்கர் (USA), BSc (Eng), MSc (Eng), சர்மினி, தர்மபாலன், மாதுமை (ACMA (UK), (CGMA), துஸ்யந்தி (BSc), தேவராஜா, Dr.ஶ்ரீரங்கன் (Norway, MBBS, MPM (US) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்வரத்தினம், சசிதரன், சங்கீதா, தர்சிகா, பிருத்திகா ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும், சகாயன் (USA), சரேசன் (USA), ஜெயஶ்ரீ, சகானா, ஹரிசங்கர், ஶ்ரீநிகா, சங்கவி (USA), மித்ரா (USA), ஜெயகௌரி, ஶ்ரீநிதி, ஆதீத்ரி (Norway), திவ்யன், கனிஷ்கன், பிரித்திகா, திலோகஷா, தர்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (சிவன் கோவிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை) நடைபெற்று, தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 3625 245**
**076 611 4412**

(CS 696) A-1

வலிகாமம் பெருவிளையாட்டு விழா

# ஆண்களுக்கான எல்லே நடேஸ்வரா சம்பியன்!



யாழ்ப்பாணம், ஜூன் 8

வலிகாமம் பெரு விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான எல்லே பிரிவில் நடேஸ்வராக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன. விக்டோரியா கல்லூரி அணியை வீழ்த்தியே நடேஸ்வரா சம்பியனானது. வயாவிளான் மத்திய கல்லூரி அணி மூன்றாம் இடத்தை தனதாக்கியது. (ம-100)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் மாகாணப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.வசீகரன் தலைமையில் சிரமதானமும், மரநடுகையும் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. (25)

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 01 . 1944



மறைவு
06 . 06 . 2024

## நடராசா பரமேஸ்வரி

பெரிய அரசடி ஆசிரியர் வீதி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், 1ம் கட்டை டச்சு வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரி நேற்று முன்தினம் (06.06.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசாவின் (Superintendent of works) அன்புக் மனைவியும், காலஞ்சென்ற Dr.அம்பிகைபாகன் (கடவுள் ஐயா) மற்றும் மீனாட்சிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர் - கனடா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற திருஞான சம்பந்தரின் (புகையிரத நிலைய அதிபர்) மைத்துனியும், Dr. விஜிதா (அவுஸ்ரேலியா), கிருபாஜினி (கணக்காளர் - அவுஸ்ரேலியா), கிரிதரன் (ஆசிரியர் - யா/ஒஸ்மானியா கல்லூரி) ஆகியோரின் தாயாரும், கஜேந்திரன் (கணக்காளர் - அவுஸ்ரேலியா), ஶ்ரீகுமரன் (பொறியியலாளர் - அவுஸ்ரேலியா), பிரதா (அதிபர் - யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரமோதயன் (அவுஸ்ரேலியா), தாரிணி (அவுஸ்ரேலியா), வரோதயன் (அவுஸ்ரேலியா), லதாங்கி, தருணிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ம் கட்டை டச்சு வீதி,
சாவகச்சேரி.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 770 8616**

(CS/55287) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை - பங்களாதேஷ்
## இன்று மோதல்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில், இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன. இலங்கை நேரப்படி காலை 6 மணிக்கு இந்த ஆட்டம் இடம் பெறவுள்ளது.

(ம)


**கணினி தட்டெழுத்தாளர் தேவை**

அனுபவமுள்ள கணினி தட்டெழுத்தாளர் தேவை.
தொடர்புகளுக்கு
077 711 1212

(CS/55297) J-1

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"




**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதுப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.

Golden Real Estate (pvt) Ltd Directer & Owner
**T.Kalaihasan**
077-029 4164
077-329 4130
077-294 1521

## வங்கி மீதி வசதி
## (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

## GOLDEN PEARL SCIENCE INSTITUTE

(நல்லூர் யாழ்ப்பாணம்) (மாநகரசபை முன்பாக)

**A/L Day Class** - மணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

| CHEMISTRY | PHYSICS |
|---|---|
| J.J. கொலின்ஸ் (BSc) | M. ஸ்பெல்மன் (BSc) |
| (077 703 1125) | (077 611 6724) |

ஆரம்பம்: 10.06.2024 திங்கள்
மாலைநேர வகுப்புக்கள் 5.30 மணிக்கு நடைபெறும்.

## வட இந்திய யாத்திரை

**காசி, அயோத்தி, சீரடிபாபா யாத்திரை**

ஆரம்பம் **15.08.2024** நாள்கள் **15**

காசி, காலபைரவர், கங்கை பூஜை அயோத்தி, னைய்மி சரண்ஜம், திருவேணி சங்கமம், கங்கா யமுனா சரஸ்வதி, கயா, புத்தகயா, சீதா , மண்ணுக்குள்ளே புதைந்த இடம், சீரடி பாபா சனிசிங்கனாபூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன், உத்திர கோசமங்கை திருப்புலாணி

## தென் இந்திய யாத்திரை

ஆரம்பம் **05.07.2024** நாள்கள் **15**

60 ற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11.
T.P - 077 736 2154, 077 768 0102

(cs.55227) (N-1)

## வேலையாள் தேவை

பேக்கரி லைன் ஆட்டோ ஓடக்கூடியவர்கள் யாழ்ப்பாணத்தில் தேவை.
தொடர்புகளுக்கு
077 252 3155, 075 076 6979

(CS/55301) J-1

## வீட்டுவேலையாட்கள் தேவை

தீவகப் பகுதியில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட வேலையாட்கள் தேவை.
(கணவன் மனைவியாக சிறு குடும்பம் விரும்பத்தக்கது)
076 226 2258

(CS/55280) J-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 09.05.2024 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**அம்பலம் கந்தையா துரைரத்தினம் (AKT)**

திதி : பூர்வபக்க பிரதமை

தோற்றம் 29.11.1938 — மறைவு 09.05.2024

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (06.06.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (08.06.2024) சனிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

எமது குலவிளக்கு மறைந்த செய்திகேட்டு நாம் துய ருற்றிருந்த வேளையில் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி வாயிலாக வும் அனுதாபம் தெரிவித்தோர், மலர்வளையம் வைத்தோர், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் வைத்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனதார நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கந்தையா வீதி,
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்**

(CR/42561) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.